அவர்களைத் தொட்டிலில் கட்டி, கொண்டுவருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெங்குமரஹடாவிலே ஒரு மகப்பேறு மருத்துவமனை அமைத்துத்தர முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் கேட்டால், அதற்கு அவர் பதில் அளிப்பார் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 347, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.*

347—

நீச்சல் குளம்

***74730—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்தை திறக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நீச்சல்குளம் கட்டும் பணிக்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களால் 1–9–2003 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. நீச்சல் குள கட்டுமானப் பணி 8–11–2003 அன்று தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் இம்மாமன்றத்தில் நீச்சல் குளம் கட்டுவதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.55 இலட்சம் ஆகும். புதுக்கோட்டையில் நீச்சல் குளக் கட்டுமானப் பணி தற்போதைய நிலை, மின் இணைப்பு, குழாய் இணைப்புப் பணிகள் மற்றும் டைல்ஸ் ஒட்டும் பணி மட்டுமே நிலுவையில் உள்ளன. இந்தப் பணிகள் வருகிற ஜுன் மாதம் முதல் வாரத்தில் முடிவடைந்துவிடும். மாண்புமிகு இதய தெய்வம்*

2005 ஏப்ரல் 13]

அம்மா அவர்களின் ஆசியோடு ஜூன் மாதத்தில் புதுக்கோட்டை நீச்சல் குளம் திறந்து வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதுக்கோட்டைக்கு எத்தனையோ சாதனைகளை இந்தக் கழகத்தினுடைய அரசில் செய்திருக்கிறார்கள். அதிலே, மிக முக்கியமான சாதனையாக, ரூ.55 இலட்சம் செலவிலே இந்த நீச்சல் குளத்தையும் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியையும் அதிலே கொடுக்கப்பட்டிருந்த காரணத்தினாலே, அந்தப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். ஜூன் மாதத்திலே, அது திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்த மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அம்மா அவர்களுடைய சாதனைகள் புதுக்கோட்டையில் நிறைய நடந்திருப்பதற்காக, அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில், தேனியில் புதிதாக உருவாகி வரும், தேனி மாவட்ட விளையாட்டு அரங்கிற்கு ரூபாய் ஒரு கோடியை அனுமதித்ததற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தேனி மாவட்ட மக்கள் சார்பில் நன்றியினைக் கூறிக்கொள்கின்றேன். மேலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே. செல்வராஜ்.

திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. ஆர்.டி. கணேசன்: மேலும், இந்த விளையாட்டு அரங்கத்திற்கு, பாராளுமன்ற மேலவை உறுப்பினர் நிதியிலிருந்து, அன்புச் சகோதரர், திரு. டி.டி.வி. தினகரன் அவர்கள் ரூபாய் 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். தற்சமயம், பணி நிறைவடைகின்ற சூழ்நிலையில் உள்ளது.

[*2005 ஏப்ரல் 13*

ஆகவே, மாவட்ட மக்களின் கோரிக்கையான விளையாட்டு அரங்கத்தில் நீச்சல் குளம் அமைப்பதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரில், இந்த ஆண்டு தேனியில் நீச்சல் குளம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே. செல்வராஜ்.

திரு. ஏ.கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரமடை சிறப்பு சிற்றூராட்சியிலே ஒரு Indoor Stadium கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, அரசுக்கு முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டில், அந்த Stadium கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எண்ணற்ற இடங்களில் Indoor Stadium அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஆண்டு முதல், மத்திய அரசிலிருந்து வழங்கப்படும் 50 சதவிகித மானியத் தொகை வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இனிமேல் வரக்கூடிய காலங்களில், தமிழக அரசே, மத்திய அரசை எதிர்பார்க்காமல் அனைத்துச் செலவுகளையும் செய்ய வேண்டுமென்று கூறியுள்ளது. அதனால், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரில், வருகிற காலங்களில் நம்முடைய மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசிலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.என். சேகரன்.

திரு. கே.என். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில், அண்ணா stadium-த்தில் நீச்சல் குளம் ஒன்றுள்ளது. இங்கு அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. விபத்துகள் என்றால்,

2005 ஏப்ரல் 13]

நீச்சல் பயிற்சிக்குச் செல்லும் சிறுவர்கள் நீரிலே மூழ்கி இறந்துவிடுகின்ற நிகழ்வு அங்கு அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. உரிய பயிற்சியாளர்கள்ள நியமனம் செய்து, விழிப்புடன் கண்காணித்து இந்த உயிர்ப் பலியைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் நீச்சல் குளத்தில் நடந்த தவறுகளுக்கு, சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களை suspend செய்து, இப்போது அந்தத் தவறுகள் நடக்காதவண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 348, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

348—

வீட்டுமனைப் பட்டா

***42126—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் அம்பேத்கர் நகர், பெரியார் நகர், கலைஞர் நகர், ராஜீவ்காந்தி நகர் ஆகிய இடங்களில் வாழ்ந்து வரும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதிகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.